சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண். 154/2022</u>

02.09.2025

வா.சா.2 திரு.கார்த்திகேயன், த/பெ. கணேசன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதியும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை, பக்கத்து பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் ஆவோம். பிரதிவாதிகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியும், நாகலெட்சுமி, பாரதிராஜன், ஜெயராமன். பிரதிவாதிகள் வெண்ணவாசல் கிராமத்தில் வசித்து வருகிறார்கள். நான் வசிக்கும் ஊருக்கும் பிரதிவாதிகள் வசிக்கும் இடையே 15 கி.மீ தூரமிருக்குமா என்றால் 2 கி.மீ. தூரமிருக்கும் 2 கி.மீ தூரம் என்பதால் பிரதிவாதிகள் ஊருக்கு அடிக்கடி வந்து போவேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வெளிநாட்டில்வேலை வாங்கி தருவதாக சொல்லி கடையோ அல்லது விளம்பர பலகையோ வைத்துள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வேறு நபர்களான யாரையாவது வெளிநாட்டிற்கு அனுப்புவதாக சொல்லி பணம் வாங்கியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி நாகலெட்சுமி எந்த நாட்டை சேர்ந்தவர் என்றால் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் என்று சொன்னார்கள். பிரதிவாதி நாகலெட்சுமியிடம் எனக்கு நேரடியாக பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதிக்கு என்ன என்ன மொழி தெரியும் என்றால் ஆங்கிலம், தமிழ் பேசுவார். பிரதிவாதிகள் ஆவணம் எழுதிக்கொடுத்ததில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ் தான் தெரியும். நான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன். ஒரு ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போடும்போது அந்த ஆவணத்தின் விவரம் தெரிந்து தான் சாட்சி கையொப்பம் போடுவார்கள் என்றால் சரிதான். ஆவணம் 2011 ஆம் வருடம் எழுதிக்கொடுக்கப்பட்டது, தேதி ஞாபகமில்லை. வாதிக்காக நான் பிரதிவாதியிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேனா என்றால் நடத்தியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுத்ததிலிருந்து 6 மாதம் கழித்து பிரதிவாதிகளிடம் கேட்டேன். நான் போய் கேட்டபோது பிரதிவாதிகள் பிள்ளைதெருவில் இடம் ஒன்று

இருப்பதாகவும் அதனை விற்பனை செய்து பணத்தை திரும்ப தருவதாகவும் சொன்னார்கள். பிரதிவாதிகள் இடத்தை விற்பனை செய்து பணத்தை திரும்ப தருவதாக சொன்னது குறித்து உறுதிமொழி ஆவணம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதி 2011 ஆம் வருடம் ஆவணம் எழுதிக்கொடுத்த பின்னிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை வாதி பிரதிவாதிகள் மீது ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எக்காலத்திலும் வெளிநாடு அனுப்புவதாக சொல்லி பணம் வாங்கவில்லை என்றாலும் நான் பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் பற்றிய விவரத்தை நன்கு தெரிந்து கொண்டு வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் போலியாக ஏற்படுத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் தாவா காலாவதியால்பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்திற்கு ஆதரவாக நான் அளிக்கும் சாட்சியம் ஏற்ககூடியதல்ல என்றால் சரியல்ல. எனது சாட்சி நிராகரிக்ககூடியது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.